| | | |
|---|---|---|
| | திி/திி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி<br>இரண்டாம் தவணைப் பரீட்சை - 2024 | |
| தரம் -11 | கத்தோலிக்க திருமறை<br>சுட்டெண்:………………………………………………….... | நேரம்:3.00 மணித்தியாலம் |

## * மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

01.“ஒருவர் தண்ணீரராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட் இயலாது” என்று இயேசு கூறியது.
1. எமக்கு 2. பரிசேயருக்கு 3. நிக்கதேமுக்கு 4. சதுசேயருக்கு

02. ஞானப் பெற்றோராவதற்குரிய தகுதியல்லாதது.
1. திருச்சபையின் சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் 2. திருமணம் முடித்தவர்கள்
3. குழந்தையின் பெற்றோரால் தேர்நதெடுக்கப்பட்டவர்கள். 4. 16 வயது பூர்த்தி அடைந்தவர்கள்

03. இயேசுவின் வாழ்விலிருந்து தூய ஆவியைப் பிரிக்க முடியாது. ஏனெனில்
1. இயேசுவின் திருமுழுக்கின் போது தூய ஆவி இறங்கினார்.
2. இயேசுவின் பாடுகளின் போது தூய ஆவியானவர் தேற்றினார்.
3. மறுரூபமான போது தூய ஆவியானவர் இறங்கி வந்தார்.
4. அவர் தூய ஆவியினாலே கருவானர்.

04. உறுதிப்பூசுதல் எனும் அருளடையாளத்தை வழங்க தகுதி பெற்ற பணியாளர்.
1. திருத்தொண்டர் 2. ஆயர் 3. குருக்கள் 4. ஆயரின் பிரதிநிதி

05. ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் எமக்கு கிடைக்கும் வரப்பிரசாதம்.
1. மன வருத்தம் 2. மனமாற்றம் 3. அருள் வாழ்வு 4. இழந்த மனித மாண்பு

06. திருமணமாகாது தமது முழு வாழ்க்கையையும் இறை அரசுக்காக அர்ப்பணித்து வாழ்தல் என்பது
1. குருத்துவ மணத் துறவு 2. குருக்களின் கடமை
3. குருத்துவ தூய்மை 4. குருத்துவ கீழ்படிதல்

07. திருத்தொண்டர்களின் கடமையல்லாதது.
1. திருமுழுக்கு வழங்குதல் 2. ஆயருக்கு உதவுதல்
3. பொதுப்பணிகளில் உதவி 4. பாவ மன்னிப்பு வழங்குதல்

08. “பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப் படுத்தினேன். மக்களினங்களுக்கு, இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்” என்ற இறைவனின் கூற்றுக்குரியவர்.
1. எசாயா 2. எரேமியா 3. எசேக்கியல் 4. திருமுழுக்கு யோவான்

09. புனித பேதுருவின் மொழிப்பெயர்ப்பாளராக செயற்பட்ட நற்செய்தியாளர்.
1. புனித மத்தேயு 2. புனித மாற்கு 3. புனித லூக்கா 4. புனித யோவான்

10. எபிரேய பெண்களுக்கு பிறக்கும் ஆண் குழந்தை கொல்வதற்காக நியமிக்கப்பட்ட தாதியர்
1. சிப்ரா , பூவா 2. சிப்ரா ,சபிரா 3. தீனா, பூவாதி 4. தெபோரா, பூவா

11. எழுபத்திரண்டு பேரின் மறைத்தூதுப் பணி பற்றி குறிப்பிடும் ஒரே நற்செய்தியாளர்

1.புனித மத்தேயு 2. புனித லூக்கா 3. புனித யோவான் 4. புனித மாற்கு

12. புதுமை என்பது “இயற்கைக்கு மாறாக இடம் பெறும் நிகழ்வு” என கூறியவர்.
1. புனித அம்புறோஸ் 2. புனித அகுஸ்தினார் 3.புனித கிளமென்ட் 4. புனித சிறில்

13. இணைத்திருமுறை நூல்களில் ஒன்று
1. தோபித்து 2. யோனா 3. திருப்பாடல் 4. எஸ்ரா

14. ஏழைகளின் சிறிய சகோதரிகளின் பணிகளில் மிக முக்கியமான பணி.
1. கல்விப்பணி 2. வயோதிபர் இல்லம் நடத்தல்
3. முதியோர் ஏழைகளின் பராமரிப்பு 4. கல்விப்பணி, சமூகப்பணி

15. வனத்து பிதாக்களுள் ……………………முதன்மையானவர் ஆவார்.
1. தேப்பஸ் சின்னப்பர் 2. வனத்து சின்னப்பர் 3. எகிப்து அந்தோனியார் 4. புனித பசில்

16. அரசாங்கத்தினால் திருமணம் பதிவு செய்வதின் முக்கிய நோக்கம்.
1. சிவில் சட்டம் 2. குருக்கள் தவறு செய்வார்கள் என்பதால்
3. சட்டபூர்மானது 4. தமது, நில, புல உரிமையைப் பாதுக்காக்க

17.“ஏரோது அவரை கொலை செய்ய விரும்பினான் ஆயினும் மக்கள் கூட்டத்தினருக்கு அஞ்சினான்” அவரை என்பது யாரை குறித்து காட்டுகிறது.
1. இயேசுவை 2. பரிசேயரை 3. திருமுழுக்கு யோவானை 4. பரபாசை

18. இயேசுவுக்கு ஏற்பட்ட மூன்றாவது சோதனை மூலம் நாம் பெறும் செய்தி,
1. புகழை விரும்பக் கூடாது 2. தன்னலம் நாட கூடாது
3. ஆன்மீக வாழ்வில் ஊட்டம் பெறல் 4. இறைவனுக்குரிய இடத்தை கொடுத்தல்

19. புனித யோவானின் பெற்றோர்.
1. செபதேயு – மகதேனாள் 2. செபதேயு – சலோமி
3. செபதேயு - ரூத் 4. செக்கரியா – எலிபெத்

20. துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் …………………….. பெறுவர்.
1. ஆறுதல் 2. நிறைவு 3. இரக்கம் 4. அமைதி

21. பிற இனத்தவரின் நற்செய்தி என அழைக்கப்படுவது,
1. புனித மத்தேயு நற்செய்தி 2. புனித லூக்கா நற்செய்தி
3. புனித யோவான் நற்செய்தி 4. புனித மாற்கு நற்செய்தி

22. மக்களால் விரும்பப்படுகின்ற இரு வரலாற்று நூல்களாவன,
1. எஸ்ரா, நெகேமியா 2. தோபித்து, யூதித்து 3. ரூத், எஸ்தர் 4. புலம்பல், பாரூக்

23. புதிய ஏற்பாட்டில் காணப்படும் வெளிப்பாட்டு இலக்கியம்,
1. மாற்கு 2. திருவெளிப்பாடு 3. தீத்து 4. யூதா.

24. நிறக் குறியீடுகளில் கறுப்பு நிறம் குறிப்பது,
1. வெற்றி 2. பஞ்சம் 3. யுத்தம் 4. மரணம்

25. பிற இனத்தாரின் திருத்தூதர் என அழைக்கப்பட்டவர்,
1. புனித யோவான் 2. புனித மத்தேயு 3. புனித லூக்கா 4. புனித பவுல்

26. புனித பவுலின் முதலாவது தூதுரைப் பயணத்தின் பயணத் தோழர்கள்,
1. பர்னபா, யோவான் மாற்கு 2. பர்னபா, சீலா 3. லூக்கா, சீலா 4. திமோத்தேயு, சீலா

27. பரிசுத்த வாரமாகக் கருதப்படுவது
1. பெரிய வியாழன் - அல்லேலூயா சனி கிழமை 2. பெரிய வியாழன் - பெரிய வெள்ளி
3. குருத்தோலை ஞாயிறு - அல்லேலூயா சனி கிழமை 4. குருத்தோலை ஞாயிறு –பெரிய வெள்ளி

28. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது.
1. தொடக்கநூல் 1-50 2. தொடக்கநூல் 1-11 3. தொடக்கநூல் 12-28 4. தொடக்கநூல் 29-50

29.“உன் தந்தையை முழு மனதுடன் மதித்து நட உன் ……………………. மறவாதே” எனும் இறைவார்த்தையைப் பூர்த்தி செய்க.
1. தந்தையின் கடின உழைப்பை 2. பெரியோரின் செயல்களை
3. பெற்றோரின் அன்பை 4. தாயின் பேறுகால வேதனையை

30.“இறக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை இழந்துவிட மாட்டேன்” என்ற கூற்றுடன் தொடர்புடையவர் யார்?
1. புனித அக்னஸ் 2. புனித மரிய கொறற்றி 3. புனித தெரேசாள் 4. புனித மரியாள்

31. புதிய ஏற்பாட்டு நூல்களின் பிரிவுகள்
1. வரலாற்று நூல், பவுலின் திருமுகம், பொதுத்திருமுகம்
2. வரலாற்றுநூல், பவுலின் திருமுகம், வெளிப்பாட்டு இலக்கியம்
3. பவுலின் திருமுகம், பொதுத் திருமுகம், வெளிப்பாட்டு இலக்கியம்
4. வரலாற்று நூல், திருமுகங்கள், வெளிப்பாட்டு இலக்கியம்

32. ஞானம் என்பதன் எபிரேயச் சொல்
1. ஹொக்மா 2. நதா 3. திராக்மா 4 தெயோப்ஸ்

33. குடும்ப மற்றும் கோத்திர ஞானம் பற்றி கூறும் நூல்
1. சீராக்கின் ஞானம் 2. சாலமோனின் ஞானம் 3. யோபு 4. திருப்பாடல்கள்

34. அல்பா, ஒமேக்கா என்பதன் கருத்து
1. நடுநிலை, தன்னலம் 2. ஆரம்பம், தொடக்கம் 3. தொடக்கமும் முடிவும் 4. இறுதி, நடுநிலை

35. கத்தோலிக்க திருமணத்தின் பண்புகளில் ஒன்று.
1. தியாகம் 2. பொதுநலம் 3. கட்டவிழாமை 4. பரிவன்பு

36. சீனாய் உடன்படிக்கை வழியாக இஸ்ரயேலர் இறைமக்களானது போல,
1. இறைமக்கள் எல்லோரும் இறைவனுடன் உடன்படிக்கை செய்ய வேண்டும்.
2. நாமும் இறைவனுடன் வாக்குறுதியை நிறைவேற்றி இறைவனின் பிள்ளைகளாக வேண்டும்.
3. இறைசித்தத்தை உடன்படிக்கைகள் மூலமாக நிறைவேற்றுபவர்களாகின்றோம்.
4. நாமும் திருமுழுக்கின் மூலம் இறைவன் செய்து கொள்ளும் உடன்படிக்கை வழியாக இறை பிள்ளைகளாகின்றோம்.

37. திருமுழுக்கு யோவானின் போதனையிலிருந்து தாய்த்திருச்சபை மூலம் எமக்குத் தரப்பட்ட பொறுப்பு
1. இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.
2. திருமுழுக்குக் கொடுத்து மக்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.
3. நீதிக்காக குரல் கொடுக்க வேண்டும்.
4. புதிய சமுகத்தைக் கட்டியெழுப்ப முற்பட வேண்டும்.

38. யோர்தான் ஆற்றில் பெற்ற சிறப்பான அனுபவத்தின் பின் இயேசு சென்றது
1. தொழுகைக்கூடத்திற்கு 2. ஆலயத்திற்கு 3. ஆற்றங்கரைக்கு 4. பாலைநிலத்திற்கு

39. ஒப்புரவு அருளடையாளத்தில் "கருச்சிதைவு" என்னும் பாவத்திற்கு குருவானவரிடம் மன்னிப்புப் பெறுவதற்கு அனுமதி பெற வேண்டியது
1. ஆயரிடம்
2. திருத்தந்தையிடம்
3. குருமுதல்வரிடம்
4. மறைக்கோட்ட முதல்வரிடம்

40. ஞாயிறு தினத்தை தூய்மையாக அனுசரிக்க முதலில் செய்ய வேண்டியது
1. ஏழைகளுக்கு தானதருமம் செய்வதாகும்
2. சிறையிலிருப்போரைத் தரிசிப்பதாகும்
3. மறைக்கல்வி வகுப்புக்களில் பங்கேற்பதாகும்
4. ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பதாகும்

(40×1= 40 புள்ளிகள்)

## பகுதி – II

* **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01.

(i) திருமுழுக்கின் போது பயன்படுத்தப்படும் அடையாளங்கள் இரண்டைத் தருக?
(ii) குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை?
(iii) இறையாட்கி பற்றிக் கூறும் உவமைகள் இரண்டை எழுதுக?
(iv) கத்தோலிக்க திருமணத்திற்குள்ள தடைகள் இரண்டைத் தருக?
(v) துறவற வாழ்வின் பண்புகள் எவை?
(vi) மனம் வருந்துதலின் இரு வகைகளும் எவை?
(vii ) ஆன்மீக இரக்கச் செயல்கள் 02 எழுதுக.
(viii) மலைப்பொழிவில் காணப்படும் படிப்பினைகள் 2 எழுதுக.
(ix) திருமுழுக்கு யோவான் அறிவுரை வழங்கிய இரு குழுக்களைத் தருக?
(x) படைப்பு பற்றிய கூறும் இரு மரபுகளும் எவை?

(10×2= 20புள்ளிகள் )

02.

அ. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் போதனைகளும் செயல்களும் காணப்படும் நூல்களை எழுதுக?

ஆ. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்கள் மூவரின் பெயர்களை எழுதுக

இ. இறைவாக்கினர் அழைப்பிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள் ஐந்து எழுதுக.

03.

அ. இயேசு விண்ணேற்றம் அடையும் முன் திருத்தூதர்களுக்கு அளித்த கட்டளையை எழுதுக.

ஆ. உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகள் 03 எழுதுக.

இ. உறுதிபூசுதல் மூலம் தூயஆவியைப் பெற்றுக் கொண்ட உமது செயற்பாடுகள் 05 எழுதுக

(2+3+5=10 புள்ளிகள்)

04.

அ. பணிக்குருத்துவத்தின் நிலைகள் எவை?

ஆ துறவறத்தார் வழங்கும் வார்த்தைப்பாடுகள் மூன்றும் எவை?

இ. திருநிலையினர் மட்டில் பொதுநிலையினரின் கடமைகள் **ஐந்து** எழுதுக? (2+3+5=10 புள்ளிகள்)

05.

அ. ஒப்புரவு அருளடையாளத்தின் வேறு பெயர்கள் இரண்டை எழுதுக.

ஆ. மனம் வருந்துவதற்கான வழிகள் மூன்றை தருக.

இ. நோயாளர்கள் மட்டில் எமது கடமைகள் ஐந்தை எழுதுக. (2+3+5=10 புள்ளிகள்)

06.

அ. இயேசுவில் இருந்த நம்பிக்கையால் குணம் பெற்ற இருவரைக் குறிப்பிடுக.

ஆ இயேசு செய்த புதுமைகளின் வகைகளைத் தருக.

இ. இயேசுவின் புதுமைகள் மூலம் வெளிப்படும் விடயங்கள் ஐந்தினை முன்வைக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

07. **சிறு குறிப்பு தருக ( விரும்பிய இரண்டிற்கு 12 வரிகள் )**

அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்

கத்தோலிக்க திருமணம்

ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச் செயல்கள்

குணமளிக்கும் அருளடையாளங்கள் (2×5= 10 புள்ளிகள்)